# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.95/2022

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.20** |
| **Name** | **:** | **திருமதி. இருதய மேரி** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர். சாட்சி காணொளி மூலம் விசாரிப்பதற்கான முன்நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்படி காணொளி மூலம் சாட்சி ஆஜராகி காணொளி மூலம் திறந்தவெளி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05-04-2024.**

**முதல் விசாரணை -**

**நான் தற்போது நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பணிபுரிந்து வருகின்றேன். நான் கடந்த 20.10.2021 அன்று காலை 11.00 மணிக்கு விரைவு நீதிமன்றம், வேலூர் நீதித்துறை நடுவராக பணியிலிருந்த போது, வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையிலிருந்து புருஷோத்தமன்**

என்பவரது மரண வாக்குமூலம் பதிவு செய்ய கோரி வந்த தகவலை பெற்று நான் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு காலை 11.45 மணிக்கு சென்றடைந்தேன். அங்கு பணி பொறுப்பிலிருந்த மருத்துவர் பரந்தாமன் என்பவர் மரண வாக்குமூலம் கொடுக்க இருக்கும் நபரை எனக்கு அடையாளம் காட்டினார். நான் மரண வாக்குமூலம் கொடுக்க இருக்கும் நபர் தீவிர அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார். வார்டில் நானும் மருத்துவரும் மட்டும் இருப்பதை உறுதி செய்துக் கொண்டேன். பின்னர் மேற்படி நபர் மரண வாக்குமூலம் கொடுக்க தகுந்த மனநிலையில் உள்ளாரா என்பதை பரிசோதனை செய்ய அது குறித்து வினவி பணி மருத்துவரிடம் சான்று பெற்றேன். மரண வாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன்பு மருத்துவரால் கொடுக்கப்பட்ட சான்று என்னிடம் காட்டப்படுவது தான்.

அதன் பிறகு மரண வாக்குமூலம் கொடுக்கும் நபர் தகுந்த மனநிலையில் உள்ளாரா என்பதை பரிசோதனை செய்ய நானும் அவரிடம் சில கேள்விகள் கேட்டு அவர் தகுந்த மனநிலையில் உள்ளார் என்பதை உறுதி செய்துக் கொண்டு அவரது மரண வாக்குமூலத்தை பதிவு செய்ய ஆரம்பித்தேன். மரண வாக்குமூலம் கொடுக்க இருக்கும் நபரிடம் அவருக்கு காயங்கள் எப்படி ஏற்பட்டது என்று நான் கேட்ட போது, அவர் நேற்று 19.10.2021 அன்று இரவு 11.00 மணிக்கு அவர் மொட்டை மாடியில் படுத்து தூங்கிக் கொண்டிருந்ததாகவும், அவர் மொட்டை மாடியில் தான் படுத்து தூங்குவார் என்றும் அவரது மனைவி அவரை விட்டு பிரிந்து சென்று 4 வருடங்கள் ஆகி விட்டது என்றும், அவரது தம்பி ராஜசேகரன் சென்னையில் வேலை செய்கிறார் என்றும், அவன் குட்டி யானை ஓட்டுகிறார் என்றும், அவனிடம் சொல்லாமல் அவனுடைய வண்டியை எடுத்து அவர் ஓட்டியதாகவும், அவன் அவனுக்கு ரூ.1,50,000/- தர வேண்டும் என்றும், அவனுடைய வண்டியை எடுத்து ஓட்டியதால் புருஷோத்தமன் ராஜசேகரன் வண்டியை திருடி சென்றவிட்டதாக ராஜசேகரன் அவரது நண்பர்களிடம் போன்

மூலம் தெரிவித்தார்.

மேற்படி சம்பவமானது 18.10.2021 அன்று நடந்ததாகவும், 19.10.2021 அன்று இரவு அவர்கள் எல்லோரும் சரக்கு சாப்பிட்டுக் கொண்டிருந்ததாகவும், பரந்தாமன், ஜெகதீசன், லாலா, ராஜசேகர், சங்கர், மோகன் மற்றும் இறந்த நபர் ஆகியோர் எல்லோரும் சரக்கு அடித்தோம் என்றும், மரண வாக்குமூலம் கொடுத்த நபர் தனியாகவும் மற்றவர்கள் எல்லோரும் ராஜசேகருடன் சேர்ந்து சரக்கு அடித்ததாகவும், அப்போது மரண வாக்குமூலம் கொடுத்த நபர் வண்டி எடுத்துச் சென்றது சம்மந்தமாக வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அப்போது என் தம்பி ராஜசேகரன் நீ வீட்டுக்கு போ, நான் வந்து கொலை பண்ணி விடுகிறேன் என்று சொன்னான் எனவும், மரணவாக்குமூலம் கொடுத்த நபர் இரவு 9.00 மணிக்கு எல்லாம் மொட்டை மாடிக்கு சென்று படுத்துவிட்டதாகவும், இரவு 11.00 மணிக்கு பெட்ரோல் வாசனை குபு குபு என வந்ததாகவும், உடனே என்னடா பெட்ரோல் வாசனை வீசுகிறதே என்ற பார்த்ததாகவும், தான் உடனே எழுந்துவிட்டதாகவும், நான் எழுத்தவுடனே வத்திக்குச்சியை கிழித்து போட்டுவிட்டார்கள் என்றும், தான் யார் என்று பார்த்த போது தன் தம்பி ராஜசேகரன் என்று நான் கீழே படுத்துக் கொண்டு தீயை அணைக்க உருண்டதாகவும், தன் மேல் ஒரு டயரை தூக்கி ராஜசேகரன் போட்டான் எனவும், அந்த டயரை தான் கெட்டியாக மாட்டிக் கொண்டதாகவும், என்ன செய்வது என்று தெரியாமல் பக்கத்து மனையில் எகிறி குதித்துவிட்டதாகவும், அதில் தன் கால் உடைந்து விட்டது என்றும், அங்கிருப்பவர்கள் அவனை அடித்துவிட்டு ஏன்டா உன் அண்ணனையே இப்படி கொளுத்தினா என்றும், தன்னை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றம், அனைத்திற்கும் சொத்து தகராறு தான் காரணம் என்றும் மரண வாக்குமூலம் அளித்ததை நான் பதிவு செய்து 12.05 மணிக்கு முடித்தேன்.

அதன் பிறகு அதை படித்து காண்பித்து அவரிடம் சரி என ஒப்புக் கொண்ட

பிறகு, தீக்காயத்தினால் ஏற்பட்ட காயத்தினால் அவருடைய இரண்டு கைகளிலும் ரேகைகள் இல்லாததால் அவருடைய இடது கால் கட்டை விரல் ரேகையை பெற்றேன்.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் எத்தனை பக்கங்களில் ரேகை பெறப்பட்டது என்றால் 9 பக்கங்களில் 6 பக்கங்களில் பெற்றேன். பதிவு முடிந்த பிறகு மருத்துவச் சான்று பெற்றேன். நான் பதிவு செய்த மரண வாக்குமூலம் அ.சா.ஆ.19-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. அதன் பிறகு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு வந்து மேற்படி மரண வாக்குமூலத்தின் அசல் மரண வாக்குமூலத்தை சீலிடப்பட்ட கவரில் வைத்து ஆரணி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை என்னுடைய நீதிமன்ற கோப்பில் சீலிடப்பட்ட கவரில் வைத்தேன். மரண வாக்குமூலத்தை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி சீலிடப்பட்டு அனுப்பி வைத்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

20.10.2021 அன்று என்னால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் கு.வி.மு.ச 164 படி தான் என்றால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 32ன் கீழானதாகும். 20.10.2021 அன்று காலை 11.00 மணிக்கு என்பதில் அடித்தல் உள்ளது என்றாலும், அதற்கு என்னுடைய சுருக்கு கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். எனக்கு காலை 11.00 மணியளவில் வேலூர் அரசு அடுக்கம்பாறையில் இருந்து வந்த தகவலை நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் எனக்கு அடுக்கம்பாறை மருத்துவமனை புறக்காவல் நிலையத்திலிருந்து எங்கள் நீதிமன்ற தலைமை எழுத்தர் மூலம் கிடைக்கப் பெற்றத்தில் நான் சென்றேன்.

மரண வாக்குமூலம் பதிவு செய்ய நான் என் உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றேனா என்றால் அவசர நிமித்தம் என்பதால் மூமெண்ட் பதிவில்

பதிவு செய்துவிட்டு பணி முடித்து வந்து பிறகு தலைமை நீதித்துறை அவர்களிடம் தெரிவித்தேன். என்னுடைய மரண வாக்குமூலத்தில் மேல் அதிகாரியிடம் அனுமதி பெற்றதற்கு குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்திலிருந்து நான் பதிவு செய்யப்பட்ட நேரத்திற்கு சுமார் 13 மணி நேர கால இடைவெளி என்றால் மரண வாக்குமூலத்தின் படி அப்படி தான் உள்ளது.

20.10.2021 அன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் மரண வாக்குமூலத்தின் படி நடைபெறவில்லை. சம்பவம் நாள் 19.10.2021 இரவு 11.00 மணி என்றால் மரண வாக்குமூலம் படி சரிதான். என்னுடைய விசாரணையினந் போது பதிவு செய்யும் போது 8 கேள்விகள் கேட்கப்பட்டதாக உள்ளது என்றால் மரண வாக்குமூலத்தீ முன்பு சரிதான். அந்த முன் கேள்விகள் அவரது மனநிலையை தெரிந்துக் கொள்வதற்காக கேட்கப்பட்டது. அந்த கேள்விகளின் போது யாராவது வாக்குமூலம் தர துன்புறுத்தினார்களா, வற்புறுத்ததினார்களா, உந்தினார்களா என்று கேட்கப்படவில்லை என்றால் சரிதான்.

மரண வாக்குமூலத்தில் பெட்ரோல் கேன் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை, காணப்படவில்லை என்றால் சரிதான். வாக்குமூலம் படி பக்கத்து மனையில் தானே எகிறி குதித்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான், தீக்காயத்திலிருந்து தப்பிப்பதற்காக குதித்தேன் என்று சொல்லப்பட்டுள்ளது. புருஷோத்தமன் என்பவர் அவரது நண்பர் லாலா என்பவரின் தவறான தூண்டுதலின் பேரில் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றாலும் அதை நான் பதிவு செய்துள்ளேன் என்றாலும் அவ்வாறு மரண வாக்குமூலத்தில் மரண வாக்குமூலம் கொடுத்தவர் சொல்லவில்லை.

மரண வாக்குமூலத்தில் மரண வாக்கமூலம் கொடுத்த நபர் ராஜசேகர் பெட்ரோல் கேனுடன் வந்து உன்னால் தான் சொத்து பிரியவில்லை என்று சொல்லி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி பங்கு பிரித்து கொடுக்க மாட்டியா, நீ

இருந்தால் சொத்து எனக்கு கிடைக்காது, உன்னை கொன்றால் தான் எனக்கு சொத்து எனக்கு கிடைக்கும் என்று குறிப்பாக சொன்னதாக காணப்படவில்லை என்றால் சொத்து தகராறு தான் காரணம் என்று சொல்லப்பட்டுள்ளது.

மரண வாக்குமூலம் பதிவானது சட்ட விதிகளுக்கு உட்டபட்டது இல்லை என்றால் சரியல்ல.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மறு விசாரணை கேட்டு அனுமதிக்கப்பட்டது.

மறு விசாரணை-

மரண வாக்குமூலத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் நான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

<u>நீதிமன்ற கேள்வி-</u>

வேலூர் மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நீதித்துறை நடுவர் என்பதால் மாதம் வாரியாக மரண வாக்குமூலம் பதிவு செய்வதற்கு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களின் நிலையாணை உள்ளது என்றால்

<u>பதில்</u>- உள்ளது.

மேற்கண்ட சாட்சியானது காணொளி மூலம் பதிவு செய்யப்பட்டதால் சாட்சியின் கையொப்பத்திற்காக மின்னஞ்சல் மூலம் சாட்சியின் கையொப்பம் பெற அனுப்பி வைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and both side counsels.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.

மேற்கண்ட சாட்சியத்தை நான் இன்று காணொளி மூலம் வழங்கினேன். நான் கொடுத்த சாட்சியத்தை மின்னஞ்சல் மூலம் பெற்றதை படித்து பார்த்து சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பமிடுகிறேன்.

**Sd./ A. Irudhaya mary**
சாட்சியின் கையொப்பம்.